Thalaivaasal
# தலைவாசல்
Thalaivaasal
எங்கள் பாரம்பரியம்
வீடு 01 வாசல் 36 | thalaivaasaltv@gmail.com | வியாழக்கிழமை | நவம்பர் 05, 2020

## திட்டமிட்டபடி லங்கா பிரீமியர் லீக்

லங்கா பிரீமியர் லீக் கிரிக்கெட் (எல்.பி.எல்) தொடரை நடத்துவதற்கு சுகாதார தரப்பினர் அனுமதி வழங்கியுள்ளதாக விளையாட்டு துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

போட்டியின் தலைவர் ரவின் விக்ரமரத்ன தெரிவிக்கையில் லங்கா பிரீமியரில் பங்கேற்கும் வீரர்கள் 7 நாள் தனிமைப்படுத்தல் காலத்திற்கு செல்ல வேண்டும், அதே நேரத்தில் ஒளிபரப்பு பணியாளர்கள் 14 நாள் தனிமைப்படுத்தப்பட்ட காலத்திற்கு உட்படுவார்கள்.

அனைத்து போட்டிகளும் ஹம்பாந்தோட்டையில் உள்ள மகிந்த ராஜபக்ச ஸ்ரேடியத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி முதல்

03



## கட்சி குறித்து விஜய் பரபரப்பு அறிக்கை

விஜய் மக்கள் இயக்கம், அகில இந்திய தளபதி விஜய் மக்கள் இயக்கம் என்ற பெயரில் கட்சியாக மாற்றி இருப்பது குறித்து நடிகர் விஜய் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

விஜய் மக்கள் இயக்கம், அகில இந்திய தளபதி விஜய் மக்கள் இயக்கம் என்ற பெயரில் கட்சியாக மாற்றி இருப்பதாக விஜய்யின் தந்தை எஸ்ஏ சந்திரசேகர் கூறினார். மேலும்,

அரசியல் கட்சியை பதிவு செய்ததற்கும், விஜய்க்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று எஸ்ஏ சந்திரசேகர் விளக்கம் அளித்தார்.

இந்நிலையில் நடிகர் விஜய் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

03

## வெலிக்கடை சிறையில் 6 பேருக்கு கொரோனா





கொழும்பிலுள்ள வெலிக்கடை சிறைச்சாலையில் ஆறு பேருக்கு கொரோனா பரிவியிருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சிறைச்சாலை மருத்துவப் பணியாளர் ஒருவருக்கு கொரோனா உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து சிறைக் கைதிகளுக்கு பி.சி.ஆர். பரிசோதனை நடத்தப்படட்டது.

இதன்போதே ஐந்து பெண் கைதிகளுக்கு கொரோனா தொற்றிருப்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

## கொரோனா மரணம் 29 ஆக அதிகரிப்பு
# இன்று 5 பேர் பலி



இலங்கையில் கொரோனா தொற்றுக்குள்ளாகி மேலும் 5 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில் கொரோனா தொற்றிளால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 29 ஆக அதிகரித்துள்ளது.

பெண்கள் மூவர் மற்றும் ஆண்கள் இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு 2 பகுதியை சேர்ந்த 46 வயதுடைய நபர் ஒருவர் கொரோனா தொற்றுக்குள்ளாகி பிம்புர வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று (04) உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் வெல்லம்பிட்டிய பகுதியை சேர்ந்த 68 வயதுடைய பெண் ஒருவர் நெஞ்சு வலி காரணமாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

கொழும்பு 12 பகுதியை சேர்ந்த 58 வயதுடைய பெண் ஒருவர் அவரது வீட்டில்

03

## கொழும்பு சுங்கப்பிரிவில் 8 பேருக்கு கொரோனா

### 75 சுங்க அதிகாரிகள் தனிமைப்படுத்தல்!

கொழும்பு சுங்கப்பிரிவைச் சேர்ந்த எண்மருக்கு இன்று கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுங்க செய்தித் தொடர்பாளர் சுனில் ஜெயரட்னே தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் இன்று மேலும் 138 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருந்த நிலையில் அவர்களில் எட்டு பேர் சுங்கப் பிரிவைச் சேர்ந்தவர்கள்

03

## உறவுகளை நினைவுகூரும் உரிமையைப் பறிக்கவேண்டாம்

### ஜனாதிபதிக்கு சிறிதரன் கடிதம்



உறவுகளை நினைவுகூரும் உரிமையை உறுதிப்படுத்த வேண்டும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்வரும் 27ஆம் திகதி மாவீரர் நாள் அனுஷ்டிக்கப்படவுள்ள நிலையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

குறித்த கடிதத்தில், “கடந்த ஆண்டும் வடக்கு கிழக்கில் உள்ள மக்கள் தங்களது உறவுகளை நினைவுக்கூர முடிந்தது. அந்தநிலைமை இந்த ஆண்டும் தொடர வேண்டும்.

மீண்டும் யுத்தம் ஒன்றையோ பயங்கரவாத செயற்பாடுகளையோ விரும்பாத மக்கள், போர்காலத்தில் உயிர்நீத்த

03

## கரவெட்டியில்
# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவருக்கு கொரோனா

வடமராட்சி, கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவருக்கு கோரோனா வைரஸ் தொற்று உள்ளமை இன்று வியாழக்கிழமை கண்டறியப்பட்டுள்ளது.

இரண்டு பெண்களும் சிறுவன் ஒருவனுக்குமே கோவிட் –19 நோய் ஏற்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர், மருத்துவர் த.சத்தியமூர்த்தி அறிவித்துள்ளார்.

கடந்த மாதம் கொழும்பு, பேலியகொட மீன் சந்தைக்குச் சென்று வந்தவருக்கு கோரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டு சிகிச்சை பெற்று வருபவரின் உறவினர்கள் மூவருமே கோரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் மூவரும் ஒரு வாரத்துக்கு மேலாக சுயதனிமைப்படுத்தலில் கண்காணிக்கப்பட்டவர்கள். அவர்களிடம் நேற்றைய தினம் பெறப்பட்ட மாதிரிகளின் அடிப்படையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இன்று இடம்பெற்ற பிசிஆர் பரிசோதனையில் கோவிட் – 19 தொற்று நோய் உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இது தவிர ஏற்கனவே கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்ட தென்பகுதியை சேர்ந்தவர்கள் தற்போது மருதங்கேணி வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகின்றனர். அவர்களில் செய்யப்பட்ட பரிசோதனையில் 3 பேருக்கு இன்னும் தொற்று இருப்பதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## அமெரிக்க அதிபர் தேர்தல் வெற்றியின் விளிம்பில் ஜோ பிடன்



அமெரிக்க அதிபர் தேர்தல் நிறைவு பெற்று தற்போது வாக்கு எண்ணிக்கை நடைபெற்று வருகிறது. அதிபரை தேர்வு செய்ய அமெரிக்காவில் மொத்தம் உள்ள

03

**தரணி எங்கும் தமிழராய் இணைவோம்**

# எம்மை நாமே பாதுகாத்துக்கொள்ள வேண்டும்




கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து எம்மை நாமே பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ள அவர் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'கொரோனா புதிய வடிவத்திலான தொற்று இரண்டாவது அலையாக இலங்கையின் பல பாகங்களிலும் பரவி வருகின்றது.

இத்தொற்றானது சமூக பரவலை எட்டிவிட்டது என்றும் கருதப்படுகின்றது. தேசியப் பேரழிவை ஏற்படுத்தப் போகிற தென்றும் எச்சரிக்கப்படுகின்றது.

இந்த நோய் தொற்றின் தீவிரம் உலகம் முழுவதும் சமூக, பொருளாதாரப் பாதிப்புக்களையும் அனைத்துத் துறைகளும் பெரும் பொருளாதார வீழ்ச்சியும் அவற்றுக்கு அப்பால் உயிர் ஆபத்துக்களையும் ஏற்படுத்தி வருகின்றது. இந்நோய் அடுத்து மூன்று ஆண்டுகளுக்கு நீடிக்கும் என்றும் உள்ளது.

இந்த நோய் முதியவர்கள், நோய் வாய்ப்பட்டோரை மட்டுமல்லாமல் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்த மக்களையும் இலகுவில் தொற்றி மரணத்தை ஏற்படுத்தி வரும் ஆபத்தும் உண்டு.

இலங்கையில் முப்பதாண்டுக்கும் மேலாக இடம்பெற்ற போர் காரணமாக தமிழ்த் தேச மக்களில் இலட்சக்கணக்கான மக்கள், இளம் சமூகம் உயிர்பலியாகியது மட்டுமல்ல ஊட்டச்சத்தற்றவர்களாக குறிப்பாக பிறக்கின்ற குழந்தைகளும், கர்ப்பிணித்தாய்மாரும் 70 - 80 வீதமானோர் பாதிப்படைந்துள்ளனர்.

இதனை ஐ.நா. 'யுனிசெவ்' குழந்தைகள் நிறுவனம் கூறிவருகின்றது. ஏற்கனவே எம்மினம் இலட்சக்கணக்கில் உயிரிழப்புக்களைச் சந்தித்து விட்டது. இதனாலும் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் கொரோனா நோயினால் பாதிப்புக்கள் அதிகரிக்க முடியும்.

கொரோனா தொற்று நோய்க்கு மருந்து 2021 நடுப்பகுதியில் தான் மக்கள் பாவனைக்கு வரும் என ஐ.நா. சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது. இந்நிலையில் தமிழ்ப் பிரதேசங்களில் கொரோனா தொற்று பரவும் வாய்ப்பு அதிகமுள்ளது.

இந்நோய்க்கான வைரஸ் கிருமி புதுப்புது வடிவங்களில் வெவ்வேறு வகை இரத்த ஓட்டமுள்ளோரிடம் வெவ்வேறு வகையில் பரவ வாய்ப்புக்கள் உண்டு என மருத்துவத்துறை விஞ்ஞானிகள் அறிவிக்கின்றனர்.

இதனால் உலக சுகாதாரத் துறையும் இலங்கை மருத்துவத் துறையினரும் மக்களின் உயிர்ப்பாதுகாப்பின் பொருட்டு எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கும் அறிவிப்புக்களுக்கும் நாம் முழு ஒத்துழைப்பையும் வழங்க வேண்டுமென வற்புறுத்துகிறோம்.

மக்கள் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியைப் பேணுவதுடன் பெருமளவில் கூட்டமாயில்லாமல் முகக்கவசம் கட்டாயம் அணிந்து தம் அலுவல்களைப் பேணவும், அதன் மூலம் இந்நோய் தொற்றிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும் வேண்டும்' எனத் தெரிவித்துள்ளார்.

## நாட்டை முடக்காமல் கொரோனாவை கட்டுப்படுத்த முயற்சிக்க வேண்டும்



முழு நாட்டையும் முடக்காமல் கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துவது குறித்து அவதானம் செலுத்த வேண்டுமென அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் செனால் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக வியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், "ஆரம்பத்தில் நாட்டின் 24 மாவட்டங்களில் கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

ஆனால், இன்று நாட்டின் அனைத்து மாவட்டங்களில் கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையானது நாடு எவ்வளவு ஆபத்தான கட்டத்தை அடைந்துள்ளது என்பது எமக்குத் தெரிகின்றது.

ஒக்டோபர் மாதம் முதலாவதாக கம்பஹா மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட கொரோனா தொற்று தற்போது பல்வேறு காரணங்களினால் நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் பரவி இருக்கின்றது. அத்துடன் 356 சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவில் 56 பிரிவுகளில் தொற்று ஏற்பட்டுள்ளது.

அதேபோன்று தற்போது 120 பொலிஸ் பிரிவுகளில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் எம் மத்தியில் சில குறைபாடுகள் காணப்படுவதன் காரணமாகவே தொற்று இவ்வாறு பரவலடைந்துள்ளது.

நாம் இந்த விடயத்தில் கூடிய அவதானம் செலுத்தாவிட்டால் மேலும் இருவார காலப்பகுதியில் முழு நாட்டிலும் கொரோனா தொற்றாளர்கள் இணங்காணப்படுவதற்கான வாய்ப்புள்ளது.

அதனால் நாம் இந்த நேரத்தில் முழு நாட்டையும் முடக்காமல் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம்.

இந்தநிலை மேலும் மோசமடையும் சந்தர்ப்பத்தில் முழு நாட்டையும் முடக்கும் நிலை ஏற்படும். ஆகையினால் நாட்டை முழுமையாக முடக்காது தொற்றைக் கட்டுப்படுத்தும் காரணிகள் குறித்து அதிக அவதானம் செலுத்த வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கொழும்பு மாவட்டத்தில் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு கொரோனா



கொழும்பு மாவட்டத்தில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேல் மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் காரியாலயத்தின், கொவிட்-19 பரவல் தொடர்பான நிலைவர அறிக்கையில் இந்த விடயம் தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி கம்பஹா மாவட்டத்தில் அதிகளவானோருக்கு இதுவரையில் கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது.

அதற்கமைய கம்பஹா மாவட்டத்தில் 3 ஆயிரத்து 598 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேநேரம், கொழும்பு மாவட்டத்தில் 2 ஆயிரத்து 3 பேருக்கும் களுத்துறை மாவட்டத்தில் 297 பேருக்கும் கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது.

இதனையடுத்து, மேல் மாகாணத்தில் இதுவரையில் கொரோனா தொற்று உறுதியானவர்களின் எண்ணிக்கை 5 ஆயிரத்து 898 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் கொரோனா தொற்று சந்தேகத்தில் 5 ஆயிரத்து 779 பேர் மருத்துவ கண்காணிப்பில் உள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மேல் மாகாணத்தில 17 ஆயிரத்து 694 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், கொரோனா தொற்றினால் நாட்டில் இதுவரையில் பதிவாகியுள்ள 23 மரணங்களில் 12 மரணங்கள் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளதாகவும் மேல் மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் காரியாலயத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வட மாகாணத்துக்குள் மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட போக்குவரத்து!

வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த தனியார் போக்குவரத்துக்களை மாவட்டங்களுக்குள்ளேயே மட்டுப்படுத்தி சேவை வழங்க மாகாண பேருந்து உரிமையாளர்கள் சங்கங்களின் ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

பொதுப் போக்குவரத்தினால் கொரோனாத் தொற்று பரவுவதைக் கட்டுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டே குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக கிளிநொச்சி மாவட்ட பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் நா.நகுலராஜா தெரிவித்தார்.

அவர் கூறுகையில், "யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட தனியார் போக்குவரத்து உரிமையாளர்கள் சங்கத்தினர் இணைந்து குறித்த தீர்மானத்தினை எடுத்துள்ளோம்.

இருந்தபோதிலும், வெளி மாகாணங்களிலிருந்து போக்குவரத்துக்களை நிறுத்துவதற்கு அந்தந்த மாவட்டங்களின் தனியார் பேருந்து உரிமையாளர்களும் நடவடிக்கை எடுத்தால் மட்டுமே பொதுப் போக்குவரத்தின் ஊடாக கொரோனாவைக் கட்டுப்படுத்த முடியும்.

இதேவேளை, அரச பேருந்துகளும் வெளி மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்துக்களை மட்டுப்படுத்தியுள்ள நிலையில் இனிவரும் காலங்களில் மாவட்டங்களுக்கு இடையில் மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட சேவையினை வழங்குவதற்கு அவர்களும் பேச்சுக்களில் ஈடுபட்டுவருகின்றனர்" என அவர் குறிப்பிட்டார்.



# அரிசி விலையை கட்டுப்படுத்த தெரியாத அரசாங்கம் கொரோனாவை எப்படி கட்டுப்படுத்தும்



அரிசிக்கு நிர்ணய விலையை அறிவிக்க முடியாத அரசாங்கத்தினால் எவ்வாறு கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்த முடியும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

இதேவேளை, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ வைரஸ் பரவல் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள சுயதொழிலாளர்கள் தொடர்பில் ஊடகங்களின் முன்னிலையில் கருத்துரைப்பதை விடுத்து ,அவர்களுக்கு அவசியமான நிவாரணங்களை வழங்க வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் இன்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது,

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதால், சுயதொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.தற்போது வாழ்க்கை செலவும் அதிகரித்துள்ளது.

இந்நிலையில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தான் வரும்போது வீதியோரங்களில் காணப்படும் விற்பனை நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்ததாக ஊடகங்களின் முன்னிலையில் தெரிவித்திருந்தார். ஊரடங்கு காரணமாகவே அவை மூடப்பட்டுள்ளன என்பதை அவர் மறந்து விட்டார் போல.

கொழும்புக்குள் நாளாந்தம் ஊதியம் பெற்று வாழ்பவர்களே அதிகளவில் இருக்கின்றனர். இந்நிலையில் ஊரடங்குச் சட்டம் காரணமாக இவர்களது அனைத்து தொழில் நடவடிக்கைகளும் முடக்கப்பட்டுள்ளன. அதற்கமைய ஜனாதிபதி இவர்கள் தொடர்பில் ஊடகங்களின் முன்னிலையில் கருத்துரைப்பதை விடுத்து, இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணங்களை வழங்க வேண்டும்.

அரிசியின் நிர்ணய விலை தொடர்பில் இன்னுமொரு வர்த்தமானி அறிவித்தலை வெளியிடப் போவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. அரசாங்கம் இது வரையில் அரசிக்கான நிர்ணய விலை தொடர்பில் மாத்திரம் மூன்று வர்த்தமானிகளை வெளியிட்டுள்ளது.

ஆனால் இதுவரையில் நிர்ணய விலையை அறிவிக்க முடியவில்லை. இவ்வாறான நிலைமையில் எவ்வாறு கொரோனா வைரஸ் பரவலை இவர்கள் கட்டுப்படுத்துவார்கள். மக்கள் பசியால் உயிரிழக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டால், மக்கள் தொடர்ந்தும் அமைதியாக இருக்கமாட்டார்கள். சுபீட்சமான ஆட்சி இன்று தோல்வியையே எதிர்நோக்கி வருகின்றது என்றார்.

## மருதனார்மடம் சந்தை புதிய கட்டடத்தில் 164 வியாபாரிகளுக்கு இட ஒதுக்கீடு



மருதனார்மடம் பொதுச் சந்தையின் புதிய கட்டடத் தொகுதியில் 164 வியாபாரிகளுக்கு இட ஒதுக்கீடு வழங்க வலி. தெற்கு பிரதேச சபை ஒப்புதல் வழங்கியுள்ளது.

ஒவ்வொரு வியாபாரிக்கு தலா 42 சதுர அடி இடத்தை ஒதுக்கீடு செய்து வழங்க சபையால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வலி. தெற்கு பிரதேச சபையின் ஆளுகைக்கு உள்பட்ட மருதனார்மடம் பொதுச் சந்தையின் புதிய கட்டடத் தொகுதியில் இட ஒதுக்கீடு விவகாரத்தில் வியாபாரிகளில் ஒரு பகுதியினர் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வந்தனர். தமதுக்கு வழங்கத் தீர்மானித்துள்ள இடம் போதுமான அளவு இல்லை என்று அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

இட ஒதுக்கீடு தொடர்பில் தமக்கு நியாயம் வழங்கப்படவேண்டும் என்று அவர்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தையும் முன்வைத்திருந்தனர்.

வலி. தெற்கு பிரதேச சபையின் சிறப்பு அமர்வு இன்று சபையில் தவிசாளர் தர்ஷன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது சந்தையின் புதிய கட்டடத் தொகுதியில் வியாபார நடவடிக்கைகளுக்காக 164 பேர் விண்ணப்பித்துள்ளதாக அறிவிக்கப்பட்டது. அவர்களுக்கு தலா 42 (6ஓ7) சதுர அடி இடத்தை ஒதுக்கீடு செய்வதற்கு சபை ஒப்புதல் வழங்கியது.

இதேவேளை, விவசாயிகளுக்கு என தனியாக ஒதுக்கீடு வழங்கப்படவேண்டும் என்றும் அதில் அவர்கள் விவசாய சம்மேளனத்தின் அனுமதியுடன் வியாபார நடவடிக்கையில் ஈடுபட முடியும் என்ற நடைமுறையைக் கொண்டு வரவேண்டும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர், சுரேஷ் முன்மொழிவை முன்வைத்தார். அதற்கும் இணக்கம் காணப்பட்டது.

## புத்தளத்தில் இளைஞன் அடித்துப் படுகொலை!

உடப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட 4ஆம் வட்டாரத்தில் நேற்று (04) இரவு இரு தரப்பினர்களுக்கிடையே இடம்பெற்ற மோதலில் இளைஞன் ஒருவன் அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

புத்தளம் உடப்பு 4ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கணகலிங்கம் ரமேஸ் (வயது 29) எனும் இளைஞனே படுகொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த குறித்த இளைஞன் கடந்த சில தினங்களுக்கு முன்னர் வெளிநாட்டிலிருந்து வருகை தந்துள்ளதுடன், 14 நாட்கள் கொரோனா தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தார் எனவும் உடப்பு பொலிஸார் குறிப்பிட்டனர்.

சம்பவம் இடம்பெற்ற நேற்று இரவு உடப்பு நகரில் உயிரிழந்த நபருடைய சகோதரர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக கிடைத்த தகவலை அடுத்து அங்கு சென்ற இளைஞனுக்கும், மேலும் இருவருக்கும் இடையில் வாக்குவாதம் இடம்பெற்றுள்ளது.

குறித்த வாக்குவாதம் கைகலப்பாக மாறியதுடன், அங்கிருந்த இருவர் குறித்த இளைஞன் மீது கடுமையாக தாக்கி படுகொலை செய்துள்ளதாக உடப்பு பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் பீ.ஜி.சீ.ஆர். குணதிலக தெரிவித்தார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நால்வருக்கு கொரோனா

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நால்வருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி நால்வரும் சாரதிகள் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதனையடுத்து,கூட்டுத்தாபனத்தில் பணியாற்றும் 37 பேரை அவர்களது வீடுகளில் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### கொழும்பு சுகப்பிரிவில்...

என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து அவர்களுடன் தொடர்புகளை கொண்டிருந்த 75 சுங்கத்துறை அதிகாரிகள் இனம் காணப்பட்டு தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### கட்சி குறித்து...

அதில், இன்று என் தந்தை திரு.எஸ்.ஏ.சந்திரசேகர் அவர்கள் ஓர் அரசியல் கட்சியை ஆரம்பித்துள்ளார் என்பதை ஊடகங்களின் வாயிலாக அறிந்தேன். அவர் தொடங்கியுள்ள கட்சிக்கும் எனக்கும் நேரடியாகவோ மறைமுகமாகவோ எவ்வித தொடர்பும் இல்லை என திட்டவட்டமாக எனது ரசிகர்களுக்கும் பொதுமக்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன் மூலம் அவர் அரசியல் தொடர்பாக எதிர்காலத்தில் மேற்கொள்ளும் எந்த நடவடிக்கைகளும் என்னை கட்டுப்படுத்தாது என்பதை தெரியப்படுத்திக்கொள்கிறேன். மேலும் எனது ரசிகர்கள், எனது தந்தை கட்சி ஆரம்பித்துள்ளார் என்பதற்காக தங்களை அக்கட்சியில் இணைத்துக்கொள்ளவோ கட்சி பணியாற்றவோ வேண்டாம் என கேட்டுக்கொள்கிறேன். அக்கட்சிக்கும் நமக்கும் நமது இயக்கத்திற்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் என் பெயரையோ புகைப்படத்தையோ எனது அகில இந்திய தளபதி விஜய் மக்கள் இயக்கத்தின் பெயரையோ தொடர்புபடுத்தி ஏதேனும் விவகாரங்களில் ஈடுபட்டால் அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### அமெரிக்க அதிபர்...

50 மாநிலங்களில் 538 தேர்வாளர்கள் (பிரதிநிதிகள்) உள்ளனர். இவர்களில் 270 பேரின் வாக்குகளை பெறும் வேட்பாளரே அமெரிக்க அதிபராக தேர்வாக முடியும்.

இதுவரை நடந்து முடிந்துள்ள வாக்கு எண்ணிக்கையின் அடிப்படையில் ஜோ பிடன் முன்னிலை வகித்து வருகிறார். 264 இடங்களில் ஜோ பிடன் முன்னிலை பெற்றுள்ளார். டிரம்ப் 214 இடங்களுடன் பின்தங்கியுள்ளார்.

இன்னும் வாக்குகள் முழுமையாக எண்ணி முடிக்கப்படவில்லை. இருப்பினும் ஜோ பிடன் வெற்றியின் விளிம்பில் உள்ளதாக அவரது பிரச்சாரக்குழு தெரிவிக்கிறது.

ஆனால், வாக்கு எண்ணிக்கையில் மோசடிகள் நடந்துள்ளதாக டிரம்ப் பிரச்சாரக் குழுவினர் குற்றம் சாட்டி வருகின்றனர்.

### உறவுகளை...

தங்களது உறவினர்களை நினைவுகூரும் உரிமையை கொண்டிருக்கின்றனர்.

அந்த உரிமையை உறுதி செய்வதன் மூலம் சிறந்த தலைவர் என்ற மதிப்பை ஜனாதிபதியால் தமிழ் மக்கள் மத்தியில் பெற முடியும்" என்று எஸ்.சிறிதரன் சுட்டிக் காட்டியுள்ளார்.

### கொரோனா மரணம்...

உயிரிழந்த நிலையில் மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனைகளில் அவர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உள்ளமை இனங்காணப்பட்டுள்ளது.

மேலும் கொழும்பு 14 பகுதியை சேர்ந்த 73 வயதுடைய பெண் ஒருவர் அவரது வீட்டில் உயிரிழந்த நிலையில் மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனைகளில் அவர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உள்ளமை இனங்காணப்பட்டுள்ளது.

இதேவேளை கொழும்பு 15 பகுதியை சேர்ந்த 74 வயதுடைய ஆண் ஒருவர் அவரது வீட்டில் உயிரிழந்த நிலையில் மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனைகளில் அவர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உள்ளமை இனங்காணப்பட்டுள்ளது.

### திட்டமிட்டபடி...

டிசம்பர் 13 வரை நடைபெற உள்ளன, சுகாதார அமைச்சு நாளை போட்டிகளுக்கான சுகாதார வழிகாட்டுதல்களை அறிவிக்கும் என தெரிவித்துள்ளார்

தலைவாசல்
எங்கள் பாரம்பரியம்
Thalaivaasal
வியாழக்கிழமை, நவம்பர் 05, 2020

# நிவாரணம் வழங்குவதற்காக 7.3 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு!

கொரோனா தொற்று பரவுவதை தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளில் பொது மக்களுக்கு நிவாரணத்தை வழங்குவதற்காக அரசாங்கம் அக்டோபர் மாதத்தில் மாத்திரம் 7.3 பில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட தொகை ஒதுக்கீடு செய்துள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், மினுவாங்கொடை கொத்தணி ஊடாக நாட்டில் மீண்டும் கொரோனா



தொற்று பரவலடைவதைத் தொடர்ந்து, இதனால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கே இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

மாவட்ட அரசாங்க அதிபர்கள் மற்றும் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளின் கோரிக்கைகளுக்கு அமைவாக மேலதிக நிதியை ஒதுக்கீடு செய்ய தயாராக வுள்ளதாகவும் திறைசேரி குறிப்பிட்டுள் ளது.

தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப் பட்டுள்ள குடும்பங்களுக்கு நிவாரண பொருட்களை பெற்றுக்கொடுக்கவும், குறைந்த வருமானம் பெறும் குடும்பங் களுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை பெற்றுக் கொடுப்பதற்காகவும் இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

# விபத்தில் போக்குவரத்து OIC மரணம்



ஆனமடுவ நகரில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஆனமடுவ பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்து பிரி வின் பொறுப்பதிகாரி உயிரி ழந்துள்ளார்.

அத்துடன், பொலிஸ் நிலையத்தின் ஊழல் தடுப்பு பிரிவின் பொறுப் பதிகாரி காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமான முறையில் கால்நடைகளை கடத்திய நபர்களை கைதுசெய்ய சென்ற போது இந்த விபத்து நேற்று (04) இரவு ஏற்பட் டுள்ளது.

கால்நடைகளை கடத்திய லொறியின் பின்புறமாக பயணித்த நிலையில் அவர்கள் பயணித்த மோட்டார் வாகனம் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நிக்கவரெட்டிய பகுதியை சேர்ந்த 38 வயதுடைய நபரே விபத்தில் உயிரிழந்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை ஆனமடுவ பொலி ஸார் மேற்கொண்டுள்ளனர்.

# நேற்று 400இற்கு மேற்பட்டோருக்கு கொரோனா

நாட்டில் நேற்று 443 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப் பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அடையாளம் காணப்பட்ட வர்களில் 25 பேர் தனிமைப்படுத்தலில் இருந்தவர்கள் என்பதுடன் ஏனைய 418 பேரும் கொரோனா தொற்றாளர்களுடன் தொடர்பைப் பேணியவர்கள் என இராணுவத் தளபதி குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, மினுவங்கொட மற்றும் பேலியகொட மீன் சந்தை கொரோனா கொத்தணியுடன் தொடர்புடைய வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை எட்டாயிரத்து 709ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 12ஆயிரத்து 187ஆக அதிகரித்துள்ளது.

மேலும், கொரோனா தொற்றிலிருந்து இதுவரை ஐயாயிரத்து 858 பேர் குணமடைந்துள்ள நிலையில் இன்னும் ஆறாயிரத்து 266 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

நாட்டில் இன்றும் ஒரு கொரோனா தொற்ற மரணம் பதிவாகியுள்ள நிலையில் மொத்தமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 24ஆக அதிகரித்துள்ளது.

# ஊரடங்கு உத்தரவுகளை மீறிய இரண்டாயிரத்து 393 பேர் கைது

தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டில் இன்று (வியாழக்கிழமை) காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் 200 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை ஆகியே பகுதிகளி லேயே இவர்கள் கைது செய்யப் பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

இதன்போது 18 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒக்டோபர் 4ஆம் திகதி முதல் இதுவரையான காலப் பகுதியில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டு தொடர்பாக மொத்தமாக இரண்டாயிரத்து 393 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், 356 வாகனங்களும் கைப்பற்றப்பட் டுள்ளன.

இதேவேளை அரசாங்கத்தினால் பிறப்பிக்கப்பட்டுள்ள சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டுக்காக மொத்த மாக 78 பேர் கைது செய்யப் பட்டுள்ளனர்.

# அரசாங்கத்தை விமர்சிப்பதற்கு எதிர்க்கட்சினருக்கு தகுதி இல்லை



அரசாங்கத்தை விமர்சிப்பதற்கு எதிர்க்கட்சினருக்கு எந்தவித தகுதியும் கிடையாது என நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவிய லாளர்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், "உலகின் பல்வேறு நாடுகள் கொரோனா வைரஸ் தொற்று கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளன.

இருந்த போதிலும் இலங்கையை பொறுத்தவரையில் பாரிய நம்பிக் கையுடன் இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கொரோனா தொற்றாளர்களை துரிதமாக அடையாளம் காண்பது மற் றும் அவர்களுடன் தொடர்புடைய வர்களுக்கு நோய் பரவாமல் இருப்பது போன்றவற்றில் விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டிற்குள் கொரோனா தொற் றினை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் பாரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

எனவே கொரோனா வைரஸ் கட் டுப்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக அரசாங்கத்தை குறை கூறுவதற்கோ விமர்சிப்பதற்கோ சஜித் பிரேமதாச தலைமையிலான எதிர்க்கட்சியினருக்கு எந்தவித தகுதியும் கிடையாது என் பதை நான் இங்கு தெரிவித்துக்கொள் கின்றேன்" என அவர் மேலும் தெரி வித்துள்ளார்.

# மூடப்பட்டது கொழும்பு மத்திய தபால் பரிமாற்றகம்




கொழும்பிலுள்ள மத்திய தபால் பரிமாற்றகம் தற்காலிகமாக மூடப் பட்டுள்ளது.

கொழும்பு 10, டி.ஆர். விஜேவர்தன மாவத்தையிலுள்ள, தபால் பரிமாற்றகத் தில் பணி புரியும் அலுவலர் ஒருவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டதைத் தொடர்ந்தே குறித்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தபால் மா அதிபர், ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித் தார்.

அதன்படி, அனைத்து செயற்பாடுகள் மற்றும் பொதுமக்கள் நடவடிக்கைகள் யாவும் தற்காலிகமாக இடைநிறுத்தப் படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதாரப் பிரிவின் ஆலோசனைக் கமைய, குறித்த அலுவலகச் சூழல் கிருமி நீக்கம் செய்யப்பட்டு, அதனைத் தொடர்ந்து, பணிகள் மீள ஆரம் பிக்கப்படும் தினம் பின்னர் அறிவிக்கப் படும் என அவர் மேலும் குறிப்பிட்டுள் ளார்.